# இலங்கையில் மாற்றுக்கருத்துக்களுக்கெதிரான அடக்குமுறை

**ஜூன் 2014**




*சேதமடைந்துள்ள வாகனத்தின் முன்புறமாக நிற்கும் "அல் ஜஸீராவின்" கொழும்பு நிருபர், இலங்கை, அளுத்கம என்னுமிடத்தில் இடம்பெற்ற இனவாத வன்முறைச் சம்பவங்களையிட்டு செய்தி சேகரித்த வேளையில், கட்டுக்கடங்காத கோஷ்டியொன்றினால் தமது ஊடகக் குழாம் எவ்வாறு தாக்குதலுக்கு உட்பட்டதென விளக்கமளிக்கின்றார் (புகைப்படம்: அல் ஜஸீரா வீடியோ)*


**INFORM** Human Rights Documentation Centre

informcolombo@gmail.com

## உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்


அ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்

ஆ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மீறுதல்

இ. ஐ.நா. விசாரணையில் சாட்சியமளிப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அச்சுறுத்தல்

ஈ. கல்வியியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல்கள், கிளர்ந்தெழுந்த ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் மீது தாக்குதல்

உ. மாணவர் செயற்பாடுகளை அடக்குதல்

ஊ. சமயச் சுதந்திரத்தை மேம்படுத்தும் HRD மீது அச்சுறுத்தல்களும், தாக்குதல்களும்

எ. இனவாத வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மீதான தாக்குதல்


*இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தவும் கண்காணிக்கவும் 1990 இன்ஃபோர்ம் INFORM நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. குறிப்பாக இன மோதல்களும் போரும் நிலவிய சூழலிலேயே இது உருவாக்கப்பட்டது. உள்ளூர், தேசிய, சர்வதேச மட்டங்களில் எழுத்துமூலமும் வாய்மொழி மூலமும் இடையீடுகளை மேற்கொள்வதிலும், அறிக்கைகளை வெளியிடுவதிலும், அது தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. படிப்படியாகவும் அடிக்கடியும் உரிமைகள் மீறப்படுகின்ற சமூகங்களை மையப்படுத்தி செயற்படுவதிலும் இன்ஃபோர்ம் தன்னை அர்ப்பணித்தது. தற்போது தேர்தல்களைக் கண்காணிப்பதிலும் கருத்துச் சுதந்திரத்திற்காகச் செயற்படுவதிலும் மனித உரிமைகள் காப்பாளர்களை மையப்படுத்தியும் இன்ஃபோர்ம் தன்னை ஈடுபடுத்தி வருகின்றது. இலங்கையில் கொழும்பை அடிப்படையாகக் கொண்டு இன்ஃபோர்ம் இயங்கி வருவதோடு, உள்ளூர் செயற்பாட்டாளர்கள், குழுக்கள் வலைப்பின்னல்களுடனும், பிராந்திய (ஆசிய) சர்வதேச மனித உரிமைகள் வலைப்பின்னல்களுடனும் நெருக்கமாகச் செயற்பட்டு வருகின்றது.*

## சாராம்சம்:

இலங்கையின் தெற்குப் பகுதியில் உள்ள அளுத்கம மற்றும் பேருவளை ஆகிய நகரங்களில் 2014 ஜூன் மாதம் இடம்பெற்ற இனவாத வன்முறையின் விளைவாக 4 பேர் (மூன்று முஸ்லிம்களும், ஒரு தமிழரும்) கொல்லப்பட்டதுடன், 80க்கு மேற்பட்டோர் காயமடைந்தனர். அத்துடன் பிரதானமாக முஸ்லிம்களின் ஆதனங்களுக்கு பரந்தரீதியிலான சேதம் விளைவிக்கப்பட்டது. பொதுபல சேனா (பௌத்த அதிகாரப் படை) என்ற பௌத்த தீவிரவாதக் குழுவின், குறிப்பாக அதன் தலைவர் வண.கல்பொத்தே ஞானசார தேரரினால் நிகழ்த்தப்பட்ட ஆத்திரமூட்டும் உரையின் விளைவாக, ஏற்பட்ட கலவரத்திற்கு அந்த அமைப்பே முதல்நிலையாகப் பொறுப்பாகும் என்பதே நீதி அமைச்சர் மற்றும் பெருமளவு வேறு அரசாங்க அமைச்சர்கள் உட்பட ஏனையோரின் பரந்தரீதியிலான கருத்தாகும். *“இந் நாட்டில் நாம் இன்னுமே சிங்களப் பொலிஸ் ஒன்றைக் கொண்டுள்ளோம்; நாம் இன்னுமே சிங்கள இராணுவம் ஒன்றைக் கொண்டுள்ளோம், இன்றைக்குப் பின்னர் தனியொரு ‘மரக்கலயா’ (முஸ்லிம்களைச் சிறுமைப்படுத்துகின்ற பதம்) அல்லது சில வேறு பறையர்கள் தனியொரு சிங்களவரைத் தொட்டால்...... அது அவர்களது முடிவாகத்தான் இருக்கும்”* என தேரர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இவ்வுரை ஆற்றப்பட்ட கூட்டத்தை நடத்தினால் அது வன்முறைக்கு இட்டுச்செல்லும் என முஸ்லிம் சமய மற்றும் அரசியல் தலைவர்கள் கோரிக்கைகள் விடுத்திருந்த போதிலும், பொலிசார் கூட்டத்திற்கு அனுமதியளித்திருந்தனர். ஒரு சில நாட்களுக்கு முன் பௌத்த மத குரு ஒருவர் மீது முஸ்லிம் இளைஞர்களினால் சார்த்துரைக்கப்பட்ட தாக்குதலொன்றே கிளர்ச்சிகளின் தோற்றுவாய் என பொதுபல சேனாவும், சில அரசாங்க அதிகாரிகளும் வலியுறுத்தியிருந்தனர். பௌத்த மத குரு தாக்கப்படவில்லை, ஆனால், அவரது சாரதியே தாக்கப்பட்டார் என ஏனையோர் கூறியிருந்தனர். வன்முறையினால் பாதிக்கப்பட்டவர்களும், நேரடி சாட்சியாளர்களும் பொலிஸினதும், அரசாங்க நிறுவனங்களினதும் பாராமுகத்தையிட்டு குற்றஞ்சாட்டியிருந்தனர்.

இனவாத வன்முறையையிட்டு செய்தி சேகரிக்கச் சென்ற எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும், பெருமளவு ஊடகவியலாளர்களும் தாக்கப்பட்டதுடன், அச்சுறுத்தப்பட்டனர். பிரதானநீரோட்டச் செய்திப்பத்திரிகைகளினால் சுதந்திரமாகச் செய்தி சேகரிக்கப்படாததினால், இனவாத வன்முறை பற்றிய உண்மைகளை வெளிப்படுத்துவதற்கு முயன்ற முன்னணிவாய்ந்த இலங்கை இதழியலாளர் இணையதளத்தை 'டுவிட்டர் / சமூக ஊடகக் கொலையாளிகள்' என அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் செய்திப்பத்திரிகையின் ஆசிரியர் குறிப்பிட்டிருந்தார். ஊடக நிறுவனங்களைத் தணிக்கை செய்வதற்கு முயல்வதாக எதிர்க்கட்சித் தலைவரினால் பாதுகாப்பு அமைச்சு குற்றஞ்சாட்டப்பட்டது.

அறியப்படாத குழுவொன்றின் எதிர்ப்புகளின் காரணமாகவும், பாதுகாப்பினை வழங்குவதற்கு பொலிசார் மறுத்ததன் காரணமாகவும், இரண்டாவது தடவையாகவும் இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த தமிழ் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வொன்று இரத்துச் செய்யப்பட்டது. பாதுகாப்புக்காக முன்னணிவாய்ந்த கொழும்பு ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு தங்கவைக்கப்பட்ட செயலமர்வில் பங்குபற்ற வந்த ஊடகவியலாளர்கள் “அதிகாரமிக்க” குழு ஒன்றினால்மேற்கொள்ளப்பட்ட பயமுறுத்தல்களின் காரணமாக ஹோட்டலில் இருந்து அதன் முகாமைத்துவத்தால் நடுஇரவில் வெளியேற்றப்பட்டார்கள். முன்கூட்டியே விரிவான தகவலைக் கோரியும், பாதுகாப்பு அமைச்சினதும் மற்றும் வேறு அரசாங்க அதிகாரசபைகளினதும் ஊடாக வெளிநாட்டு விருந்தினர்களுக்கு விசாக்களை கட்டுப்படுத்தியும் அரசாங்கச் சார்பற்ற தாபனங்களினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு வெளிவிவகார அமைச்சினாலான முன்மொழிவுகள் பற்றி ஊடக அறிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தன. வடக்கில் தமிழ் அரசியல்வாதிகளினாலும், காணாமல்போனவர்களின் குடும்பங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்புப் போராட்டமொன்றை அடக்குவதற்கு இராணுவமும், பொலிஸூம் முயன்றது.

அரசாங்கத்தை விமர்சித்த கல்வியியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டன. பல்கலைக்கழக மாணவர்களின் அடக்குமுறையானது கைதுகளுடன் தொடர்ந்தது. போராட்டங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அத்துடன் இலங்கையில் உள்ள பிரதான நீரோட்ட தொலைக்காட்சியினால் பிரச்சாரப்படுத்தப்பட்ட உரையொன்றில், புத்திசுவாதீனமற்றவர்கள், முட்டாள்கள் மற்றும் நரிகள் என மாணவ செயற்பாட்டாளர்கள் உயர் கல்வி அமைச்சரினால் நிந்திக்கப்பட்டனர். கொழும்பில் உள்ள

பாடசாலையொன்றின் நிலைமைகள் பற்றி கிளர்ந்தெழுந்த ஆசிரியர்களும், பெற்றோர்களும் கூட தாக்கப்பட்டனர். மாணவ செயற்பாட்டாளர்களின் கழுத்துக்கள் உடைக்கப்படலாமென நீதவான் ஒருவர் பரிந்துரைத்த அதே வேளை, பெண் என்பதால் அரசியல் செயற்பாட்டிலிருந்து விலகி இருக்குமாறு ஒரு பெண் மாணவச் செயற்பாட்டாளர் ஒருவருக்கு இன்னமொரு நீதவானால் புத்திமதி கூறப்பட்டதாக "மனித உரிமைகளுக்கான மாணவர்கள்" என்ற அமைப்பின் அறிக்கையொன்று வலியுறுத்தியிருந்தது.

பெருமளவு தாக்குதல்களுக்கும், பயமுறுத்தலுக்கும் அத்துடன் அச்சுறுத்தலுக்கும் உட்பட்டிருந்த பௌத்த மதகுரு ஒருவருக்கான பொலிஸ் பாதுகாப்பு திடீரென மீளப்பெறப்பட்டதுடன், அவர் பின்னர் காயங்களுடன் வீதியோரத்தில் கண்டுபிடிக்கப்பட்டார். பின்னர் ஆட்கடத்தலை மேடையேற்றியதாகவும், தனக்குத் தானே காயங்களை இழைத்ததாகவும் பொலிசார் மதகுருவை கைது செய்தனர்.

முழு அளவில், சிறுபான்மையினரும், அரசாங்கத்தை விமர்சித்தவர்களும் தண்டனையிலிருந்து விலக்களிக்களிக்கும் உரிமையுடன் பெரும் எண்ணிக்கையிலான தாக்குதல்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும், அபகீர்த்திக்கும் முகங்கொடுத்த இன்னொரு மாதமாக ஜூன் மாதம் விளங்கியது.

## அ. பேச்சுச் சுதந்திரத்தின் மீறல்

### 1. உத்தியோகபூர்வமற்ற தணிக்கையை அரசாங்கம் சுமத்துகின்றது

ஜூன் 15இலும், 16இலும் இடம்பெற்ற அளுத்கம மற்றும் பேருவளை இனவாத வன்முறையைத் தொடர்ந்து தணிக்கை செய்வது பற்றிய கடிதமொன்று ஒவ்வொரு ஊடகத் தாபனத்திற்கும் அனுப்பப்பட்டதாக எதிர்க்கட்சித் தலைவர் திரு.ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டிருந்தார். கூறப்பட்டுள்ளவாறு செய்யுமாறும் அல்லது சட்ட நடவடிக்கை மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கான உத்தரவுப்பத்திரங்களை ரத்துச்செய்தல் போன்ற பின்விளைவுகளை அனுபவிக்க வேண்டிவருமெனவும் ஊடகத் தாபனங்களுக்கு கடிதம் அறிவுறுத்தியுள்ளதாக கூறப்பட்டுள்ளது என திரு.விக்ரமசிங்க குறிப்பிட்டிருந்தார்.[1]



*அளுத்கம நகரத்தில் இராணுவத்திலான ஊரடங்குச் சட்டமொன்று பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும், முஸ்லிம்களை ஆயுதப் படைகள் பாதுகாப்பதாக குற்றஞ்சாட்டி "பொது பல சேனாவை" ஆதரிக்கும் மக்கள் கூட்டம் வீதிகளில் கும்பலாக நிற்கின்றனர்.*

### 2. சமூக ஊடகங்களை அடக்குவதற்கான முயற்சிகள்

சமூக ஊடக வலைப்பின்னல்களை அடக்குவதற்கு விசேட சட்டவாக்கத்தைக் கொண்டு வருவதற்கு திட்டமிடுவதாக இலங்கை வழக்கறிஞர் சங்கம் அரசாங்கத்தைக் குற்றம்சாட்டியிருந்தது. வாய்மொழியிலானதும், எழுத்திலானதுமான பேச்சுச் சுதந்திரங்கள் ஊடாக இன மற்றும் சமய ஒற்றுமையின்மையைத் தூண்டுவதற்கு முயற்சிக்கின்றவர்களுக்கு எதிராக சட்டத்தை இயற்றுவதற்கு சட்ட வினைப்படுத்தல் அதிகாரசபைகளுக்கு பாதுகாப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவினால் அனுப்பப்பட்ட அறிவுறுத்தல் குறித்து குறிப்பிட்ட இலங்கை வழக்கறிஞர் சங்கத்தின் சட்டத்தின் ஆட்சி மீதான நிலையியற் குழுவின் தலைவரும், ஜனநாயகத்திற்கான வழக்கறிஞர்களுக்கான கூட்ட அழைப்பாளருமான 'லால் விஜேநாயக்க', சொல்லப்பட்ட அறிவுறுத்தல் சமூக ஊடகங்கள் ஊடாக தகவலைப் பெறுவதிலிருந்து மக்களை தடுப்பதற்கான நுண்ணிய முகத்திரையிடப்பட்ட முயற்சியொன்றாக விளங்கும் எனத் தெரிவித்தார்.[2]

---

[1] http://www.adaderana.lk/news/video-govt-imposed-unofficial-censorship-to-cover-up-its-sins-ranil- (Last accessed on 12th July 2014)

[2] http://www.ceylontoday.lk/51-67271-news-detail-laws-to-suppress-social-media-planned-basl-alleges.html (Last accessed on 12th July 2014)

**3. 'டுவிட்டர்' கொலையாளிகள், 'கிரவுன்ட்வியூஸ்', கொலம்பகே போன்றோரைக் கைது செய்க - அரசாங்க ஊடகங்கள்**

நான்கு பேர் மரணமடைந்ததும், மேலும் சுமார் 80 பேர் காயமடைந்ததுமான தென் மேற்கிலான அளுத்கமவில் கடந்த வாரம் இடம்பெற்ற பௌத்த-முஸ்லிம் மோதல்கள் பற்றி அறிக்கையிட்டதனால் சமய கெடுபிடிநிலைகளைத் தூண்டுவதாக அல் ஜஸீராவின் கொழும்பு நிருபர் திரு.தினுக் கொலம்பகேயை அரசாங்கத்திற்குச் சொந்தமான ஆங்கில நாளாந்த தினசரிப்பத்திரிகை ('டெயிலி நியூஸ்') திரு.ராஜ்பால் அபேநாயக்க ஒரு தொடரிலான 'டுவிட்டர்' வசைமாறிகளில் குற்றஞ்சாட்டியிருந்தார். உயிர்ப்பலிகளை மிகைப்படுத்திக் கூறுவதாகவும், 'சமூக ஊடகக் கொலையாளி' ஒருவராக இருப்பதாகவும் Huffington Postஇல் பத்தியொன்றை எழுதும் அனுபவமிக்க இலங்கையின் நிருபர் ஒருவரான கொலம்பகேயை அவர் குற்றஞ்சாட்டினார். 'டுவிட்டர்' கொலையாளிகளை, 'கிரவுன்ட்வியூஸை'[3], கொலம்பகே போன்றோரைக் கைது செய்க' என 'டுவிட்டரில்' அபேநாயக்கா வலியுறுத்தியிருந்தார். பெருமளவு 'டுவிட்டர்' குறிப்புக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ 'டுவிட்டர்' கணக்குக்கும் மற்றும் ஆளும் கட்சி;யைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினராகவும் உள்ள அவரது மகனின் கணக்குக்கும் பிரதிசெய்யப்பட்டன.[4]

**4. இனவாத வன்முறையையிட்டு செய்தி சேகரித்த வேளை ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்டதுடன், சாரதி தாக்கப்பட்டார்**

ஜூன் 16 அன்று அளுத்கமவில் 'சண்டே லீடர்' என்ற ஆங்கில வார இறுதி செய்திப்பத்திரிகையின் ஊடகவியலாளர் திரு.பினோய் சூரியஆரச்சி மூர்க்கத்தனமான கும்பலொன்றினால் அச்சுறுத்தப்பட்டதுடன், அவரது சாரதி தாக்கப்பட்டார். ஜூன் 15 அன்று அளுத்கம பகுதியில் வெடித்த இனவாத வன்முறையையிட்டு செய்தி சேகரிப்பதற்காக இரு வேறு ஊடகவியலாளர்களுடன் அவர் சென்றிருந்தார். அவர்கள் கும்பலொன்றினால் சுற்றி வளைக்கப்பட்டார்கள். அவர்களை விடுவிப்பதையிட்டு அவரது சகபாடிகள் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முயல்வதற்கு முன் சிறிது நேரத்திற்கு திரு.சூரியஆரச்சி பணயக்கைதியாக வைக்கப்பட்டிருந்தார். சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.[5] அதே தினம், கறுவாக்காடு பொலிஸூடன் திரு.சூரியஆரச்சியின் சகபாடிகளில் ஒருவரும், சாரதியும் முறைப்பாடொன்றைத் தாக்கல் செய்தனர். ஆனால், ஜூலை 11 வரை எவித முன்னேற்றமும் காணப்படவில்லை.

**5. இனவாத வன்முறையையிட்டு செய்தி சேகரித்த ஊடகவியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல் அத்துடன் தாக்குதலில் பாரதூரமான காயங்கள்**

"அந்த இரவு நான் இறக்கப் போகின்றேன் என நான் நினைத்தேன்" என ஜூன் 15 அன்று அளுத்கமவில் இனவாத வன்முறையையிட்டு செய்தி சேகரிக்கச் சென்ற பின்னர் 'சண்டே ரைம்ஸ்' (ஆங்கிலம்) / 'லங்காதீப' (சிங்களம்) ஆகிய செய்திப்பத்திரிகைகளைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவரான திரு.சரத் சிறிவர்தன தெரிவித்தார்.[6] "சிங்களவரும், முஸ்லிம்களும் என சுமார் நூறு பேர் என்னைச் சுற்றிவளைத்து, தாக்கினர். அவர்கள் எனது புகைப்படக் கருவியை எடுத்து நிலத்தின் மீது அடித்து நொறுக்கினர். வன்முறையில் ஈடுபட்ட இரு சனசமூகங்களினதும் உறுப்பினர்களின் புகைப்படங்களை நான் எடுத்தேன். திடீரென அவர்கள் என் மீது தாக்குதல் நடத்தினர்" என அவர் விவரித்தார். "திடீரென எனது தலை மீது பலமாக அடிபட்டதை நான் உணர்ந்தேன். பின்னால் இருந்த ஒரு சிலர் என்னை அடிக்க ஆரம்பித்தார்கள். நான் கீழே விழுந்தேன். அவர்கள் தொடர்ந்தும் என்னை அடித்தார்கள். அவர்கள் எனது உடைகளைக் கிழித்தெறிந்தார்கள். சகல பக்கங்களிலிருந்தும் என்னை அடித்தபடியே இருந்தார்கள். என்னைக் கொல்ல வேண்டும் என அவர்கள் கூறிக்கொண்டே இருந்தார்கள்." தூரத்திலிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டவுடன் கும்பல் கலைந்து சென்றது. அண்மையில் இருந்த தோட்டமொன்றுக்கு சிறிவர்தன தவழ்ந்து சென்று, கும்பல் கலைந்து செல்லும் வரை ஒளிந்திருந்தார் என்பதுடன், வைத்தியசாலையில் சிகிச்சையும் பெற்றுக்கொண்டார்.

---

[3] An online citizen journalism website that regularly publishes contents critical of the present government. (http://groundviews.org/)

[4] http://www.theaustralian.com.au/news/world/sri-lanka-call-to-arrest-reporter/story-e6frg6so-1226965565934?nk=886e7a60410784c6ae132b150b70b3d8 (Last accessed on 12th July 2014)

[5] http://colombogazette.com/2014/06/16/journalist-held-hostage-and-released (Last accessed on 12th July 2014)

[6] http://www.sundaytimes.lk/140622/news/need-for-calm-say-both-sides-104377.html (Last accessed on 12th July 2014)

## 6. பீ.பீ.சி. சந்தேசய(சிங்கள சேவை) நிருபர், அல் ஜஸீரா குழுவினர் மற்றும் உள்ளூர் தொலைக்காட்சிக் குழுவினர் தாக்கப்பட்டனர்

ஜூன் 15 அன்று பீ.பீ.சி. சந்தேசயவுக்காகப் பணியாற்றுகின்ற உள்ளூர் நிருபர் ஒருவர் கும்பலொன்றினால் தாக்கப்பட்டதுடன், இனவாத வன்முறையையிட்டு செய்தி சேகரிக்க வேண்டாமெனவும் அச்சுறுத்தப்பட்டார். ஜூன் 16 அன்று, தொலைக்காட்சி நிலையமொன்றிலிருந்து குழுவொன்று அப்பகுதியில் பிரயாணம் செய்த வேளை தடுக்கப்பட்டதுடன், கிட்டத்தட்ட தாக்கப்பட்டது. அக்குழு காயங்களின்றி தப்பினாலும், புகைப்படக் கருவி சேதமடைந்தது.[7] ஜூன் 17 அன்று மத்துகமவிலும், அளுத்கமவிலும் பிரயாணம் செய்த அல் ஜஸீராவைச் சேர்ந்த ஊடகக் குழுவொன்றைக் கும்பலொன்று தாக்கியது. அத்துடன் அவர்களது புகைப்படப்பிடிப்பாளரை அடித்து உதைத்ததுடன், அவர்களது வாகனத்திற்கு சேதத்தையும் விளைவித்தது.[8]

## 7. ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு இரத்துச் செய்யப்பட்டது



*நீர்கொழும்பில் TISL ஊடகப் பயிற்சியை குழப்பிய கும்பலின் உறுப்பினர் ஒருவர் ஊடகவியலாளர்களை நோக்கிக் கத்துகின்ற அதேவேளை, கும்பலைப் பாதுகாப்பதற்காக முன்புறமாக ஒரு சிரேஷ்ட பொலிஸ் அலுவலர் நிற்கின்றார் (புகைப்படம்: TISL)*

நீர்கொழும்பு கோல்ட் சான்ட்ஸ் ஹோட்டலில் (மேல் மாகாணம்) இலங்கை ட்ரான்ஸ்பேரன்ஸி இன்ரர்நஷனலினால் (TISL) தமிழ் ஊடகவியலாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 07.06.2014இல் வளவுக்கு வெளியே வந்திறங்கிய வன்முறைக் கும்பலொன்றினால் மேற்படி செயலமர்வு இடையூறு செய்து குழப்பப்பட்டது. பயங்கரவாதிகளுக்கு (TISL) உதவுவதாக இக்கும்பல் குற்றஞ்சாட்டியதுடன், சர்வதேச விசாரணையொன்றில் இலங்கைக்கு எதிராகச் சாட்சியத்தை வழங்குவதற்காக மக்களைப் பயிற்றுவிப்பதற்காகவே செயலமர்வு நடத்தப்படுகிறது என வலியுறுத்தினர். செயலமர்வானது சட்டபூர்வமானது என்பதுடன், நாட்டுக்கு எதிரான ஏதோவொன்று அல்ல என TISL பிரதிநிதிகளினால் எடுத்துரைக்கப்பட்டபோதிலும், எதிர்ப்பாளர்களைக் கலைந்து போகச்செய்வதற்கு பொலிஸ் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. பதிலாக செயலமர்வை நிறுத்துமாறு பொலிஸார்

---

[7] http://www.ft.lk/2014/06/18/death-toll-rises-to-4-from-aluthgama-riots/ (Last accessed on 12th July 2014)

[8] Watch video from 0.58 – 1.20 mins http://www.aljazeera.com/news/asia/2014/06/sri-lanka-riots-prompt-international-concern-201461752248175495.html (Last accessed on 12th July 2014)

கட்டளையிட்டனர். அவ்விடத்திற்கு வந்த பொலிஸ் அத்தியட்சகர் ஜே.கே.எச்.லியனகே செயலமர்வு நிறுத்தப்பட்டால் மட்டுமே பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என TISLஇடம் கூறினார். பங்குபற்றுநர்கள் நீர்கொழும்பை விட்டு வெளியேறினர். செயலமர்வில் பங்கெடுத்த ஊடகவியலாளர்கள் வெகுஜன ஊடக, தகவல் அமைச்சினால் பதிவுசெய்யப்பட்டு, அவ்வமைச்சினால் அதிகாரம் பெற்றுள்ளார்கள் என்றும், எதிர்ப்பாளர்களினால் வலிறுத்தப்பட்டவாறு ஊடகவியலாளர்கள் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் முகவர்கள் என்றால், அதற்கான பொறுப்பை வெகுஜன ஊடக, தகவல் அமைச்சுத் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் TISL குறிப்பிட்டுள்ளது. இந்த ஊடகடவியலாளர்கள் தமிழர்கள் என்பதுடன், அவர்கள் தமிழ் மொழியிலேயே பணியாற்றுகின்றார்கள் என்ற காரணத்தினால் தான் அவர்கள் எல்.ரி.ரி.ஈ. முகவர்களாக நாமம் சூட்டப்பட்டுள்ளதாக TISL வலியுறுத்தியது. முன்னர் மே மாதத்தில் இதே செயலமர்வை பொலன்னறுவையில் (வட மேல் மாகாணம்) TISL ஒழுங்குசெய்த போது, ஹோட்டல் உரிமையாளருக்கு இராணுவத்தினால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களின் காரணமாக அது கைவிடப்பட்டது. எனினும், சிங்கள ஊடகவியலாளர்களுக்காக ஒழுங்குசெய்யப்பட்ட இதையொத்த செயலமர்வுகள் நடைபெறுவதற்கு அனுமதிக்கப்பட்டன. இரண்டாவது தடவையாகவும் செயலமர்வுக்கு இடையூறு செய்யப்பட்டதை TISL வன்மையாகக் கண்டித்ததுடன், இதற்கு பொறுப்பாகவுள்ளவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியது.[9]

## 8. அதன் பத்திரிகையாளர் மகாநாட்டுக்கு ஊடகவியலாளர்களை ஹொல்சிம் தடைசெய்கிறது

கடந்த வாரம் 'ஹொல்சிம் லங்கா' என்ற நிறுவனத்தினால் பத்திரிகையாளர் மகாநாடொன்று நடத்தப்பட்டது. இதில் ஹொல்சிம் குழுமத்தின் நிறைவேற்று அதிகாரி பேர்னாட் பொன்டனா கொழும்பில் உள்ள ஊடகவியலாளர்கள் முன் உரையாற்றினார். இதில் பங்கெடுத்த 'சண்டே லீடர்' (ஆங்கில வார இறுதிப் பத்திரிகை) மற்றும் அதன் சகோதர சிங்கள மொழியிலான வார இறுதிப் பத்திரிகை 'இறுதின' ஆகியவற்றின் ஊடகடவியலாளர்களுக்கு தடைவிதிக்கப்பட்டது. சுவிஸை தளமாகக் கொண்ட மிகப்பெரிய சிமெந்து நிறுவனமான ஹொல்சிம்மின் துணை நிறுவனமொன்றான ஹொல்சிம் லங்காவின் முகாமைத்துவத்தை விமர்சித்து அண்மைக் காலத்தில் ஒரு சில கட்டுரைகளை 'சண்டே லீடர்' வெளியிட்டிருந்தது. அதன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி பேர்னாட் பொன்டனாவிடமிருந்து "கஷ்டமான கேள்விகளைக்" கேட்கின்ற ஊடகவியலாளர்களை வரவழைப்பதில்லை என்றும், ஊடகங்களின் 'தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு' மட்டுமே பத்திரிகையாளர் மகாநாடு நடத்தப்படுகிறது என்பதையும் ஹொல்சிம் லங்காவின் தொடர்பாடல் முகாமையாளர் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் 'சண்டே லீடர்' குறிப்பிட்டிருந்தது.[10]

## 9. கொழும்பு ஹோட்டலில் இருந்து தமிழ் ஊடகவியலாளர்கள் நள்ளிரவில் பலவந்தமாக வெளியேற்றம்

ஜுன் 7 அன்று நீர்கொழும்பில் TISL செயலமர்வுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதன் காரணமாக (மேலே பார்க்க), கொழும்பில் மிகவும் பாதுகாப்பான பகுதியில் அமைந்துள்ளதாக TISL கருதிய கலதாரி ஹோட்டலுக்கு மேற்படி செயலமர்வில் பங்கேற்க வந்திருந்த ஊடகவியலாளர்கள் அழைத்துச்செல்லப்பட்டார்கள். ஆனால், குறிப்பிட்ட பங்கேற்பாளர்கள் பிரவேசித்து சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் ஹோட்டலில் இருந்து உடனடியாக வெளியேறுமாறு அவர்களை ஹோட்டல் முகாமைத்துவம் கேட்டுக்கொண்டது. இது பற்றி முகாமைத்துத்திடம் TISL விசாரித்த போது,ஹோட்டலில் இருந்து ஊடகவியலாளர்களை அப்புறப்படுத்துமாறு அதிகாரமிக்க தாபனமொன்று தம்மைப் பலவந்தப்படுத்தியதாகவும்,ஹோட்டல் முகாமைத்துவம் அதற்கு இணங்காவிட்டால் "அவர்கள்" நேரடியாக அங்கு வந்து,ஹோட்டலில் இருந்து ஊடகவியலாளர்களை அப்புறப்படுத்துவதாகவும் அச்சுறுத்தியுள்ளது.[11]

---

9 http://www.tisrilanka.org/?p=11979 (Last accessed on 12th July 2014)
10 http://www.asianmirror.lk/news/item/1563-holcim-bars-sunday-leader-swiss-giant-blatantly-violates-media-freedom (Last accessed on 12th July 2014)
11 http://www.tisrilanka.org/?p=11979 (Last accessed on 12th July 2014)

## 10. பேர்ரோல்ட் பரெஸ்ட்டின்(Bertolt Brecht) மேடை நாடகங்களின் அரசியல் உட்குறிப்புகள் மீதான கட்டுரையை அரசாங்க ஊடகங்கள் தணிக்கை செய்கின்றன

பேர்ரோல்ட் பிரெஸ்ட்டின் மேடை நாடகங்களின் பலமான அரசியல் உட்குறிப்புகள் மீதான கட்டுரையொன்றின் மீது அதன் ஜூன் 15இன் 'சாஸ்திரிய அதிரேக்கய' (இலக்கிய அனுபந்தம்) என்ற அனுபந்தத்தை அரசாங்க நிருவாகத்திலான சிங்கள வார இறுதி செய்திப்பத்திரிகையான 'சிலுமின' நிறுத்திவைத்துள்ளது. 'சாஸ்திரிய அதிரேக்கய' என்ற அனுபந்தத்தின் தலைப்புக் கட்டுரையாக வெளியிடப்பட்ட கட்டுரையானது கபடநாடகம், அடக்குமுறை மற்றும் ஊழல் ஆகியவற்றுடன் வர்ணிக்கப்பட்டுள்ள அரசியல் உறுப்புக்களைக் கொண்டுள்ள சமூகங்களுடன் எவ்வாறு பேர்ரோல்ட் பிரெட்டின் நாடகங்கள் சம்பந்தப்பட்டுள்ளன என்பதையிட்டு கருத்துப்பரிமாறுகின்றது. எனினும், இலங்கை அரசாங்கத்திற்கு ஏதேனும் நேரடியான மேற்கோளை கட்டுரை செய்யவில்லை. பதிலாக, இது அதை முழு 'முறைமையின்' முறையான சீர்குலைவொன்றாக வர்ணித்து, மிகவும் பாரிய சூழமைவொன்றில் இலங்கையின் அரசியல் உண்மைநிலைமைகளை பகுப்பாய்ந்துள்ளது. [12]

## 11. இந்தியாவில் உள்ள தமிழ் தேசியவாதிகளினால் யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையின் திரைப்படத்திற்கு அச்சுறுத்தல்




*தமிழ் நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ளது: 'ஒப நெத்துவ, ஒப எக்க' (புகைப்படம்: பிரசன்ன விதானகே)*

தமிழர் சார்பு தேசியவாதக் குழுக்களிலிருந்து கிடைத்ததாகக் கூறப்படும் அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்புக்களைத் தொடர்ந்து இந்தியா, தமிழ் நாடு திரையரங்குகளில் திரையிடப்பட்ட யுத்தத்திற்குப் பிந்திய சூழ்நிலைகள் பற்றிய இலங்கையின் திரைப்படமொன்று காட்சிப்படுத்துவது நிறுத்தப்பட்டது.[13] குறிப்பிடத்தக்க இலங்கையின் திரைப்பட இயக்குனர் பிரசன்ன விதானகேயினால் இயக்கப்பட்ட இந்தியா - இலங்கைக் கூட்டுத் தயாரிப்பான 'ஒப நெத்துவ, ஒப எக்க' என்ற திரைப்படத்தின் தயாரிப்பாளர்கள் திரைப்படத்தை மீண்டும் திரையிடுவதற்கு தலையிடுமாறு கோரி தமிழ் நாடு முதலமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ளார்கள். "யுத்தத்திற்குப் பிந்திய இலங்கையையும், தமிழ் மக்களுக்கு நீதியை மறுத்துரைப்பதனால்

---

[12] http://www.asianmirror.lk/news/item/1550-silumina-bans-bertolt-brecht-for-damaging-government-propaganda (Last accessed on 12th July 2014)

[13] http://dbsjeyaraj.com/dbsj/archives/31048 (Last accessed on 12th July 2014)

ஏற்படுகின்ற பின்விளைவுகளையும் திரைப்படம் கூருணர்வுடன் வர்ணிக்கின்றது. இந்தியாவில் இத் திரைப்படத்தை சாத்தியமானளவு பரந்தரீதியில் திரையிடுவதற்கு ஆதரவளிப்பதற்குப் பதிலாக, நாம் இன்று எதிரானதையே கண்கூடாகப் பார்க்கின்றோம். இது தமிழர்களின் அக்கறைக்கு தீங்கு விளைவிக்கின்றது என்பதை திரைப்படத்தைப் பார்க்காமலேயே சில வழிதவறிய மக்கள் தீர்மானித்துள்ளனர்" எனக் கடிதம் குறிப்பிட்டுள்ளதுடன், திரைப்படம் திரையிடப்படுவதற்காக பொலிசாரின் பாதுகாப்பையும் கோரியுள்ளது. ஜூன் 20 அன்று சென்னையில் இரு திரையரங்குகளில் திரைப்படம் வெளியிடப்பட்டதாகவும், மறுநாள் குழுக்களிலிருந்து அச்சுறுத்தல் அழைப்புக்களை திரையரங்கு உரிமையாளர்கள் பெற்றதாகவும், இவ்விடயம் பொலிஸூக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும், ஆனால், இதற்கு ஆதரவு இருக்கவில்லை எனவும் தயாரிப்பாளர்களில் ஒருவரான திரு.ராகுல் ரோய் கூறியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. உள்ளூர் தமிழ்ச் சங்கங்களிலிருந்து வந்த அச்சுறுத்தல்களின் காரணமாக காட்சிகள் இடைநிறுத்தப்பட்டதாக PVR சினிமாஸின் சில்லத்தியா போஹரா தனது 'டுவிட்டரில்' குறிப்பிட்டுள்ளார். ஆனால், திரைப்படத்தைப் பார்ப்பதற்கு ரசிகர்கள் இல்லாததன் காரணமாகவே காட்சிகள் 'தன்னிச்சையாக' இரத்துச்செய்யப்பட்டன என ஏனைய திரையரங்குக்குக் தகவலளிப்பவர்கள் கூறியுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. ஏதேனும் முறையான முறைப்பாட்டினைத் தாம் பெறவில்லை என பொலிசார் தெரிவித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

## ஆ. ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை மீறுதல்

### 12. அரசாங்கச் சார்பற்ற நிறுவன நிகழ்ச்சிகளுக்கு வெளிநாட்டு அழைப்பாளர்களுக்கான புதிய விசா ஒழுங்குவிதிகள்

அரச சார்பற்ற நிறுவனங்களினால் (NGO) ஒழுங்குசெய்யப்படும் நிகழ்ச்சிகளின் வெளிநாட்டு அழைப்பாளர்களுக்கான விசாவை வழங்குவது தொடர்பில் புதிய ஒழுங்குவிதிகளை உள்ளடக்குகின்ற முன்மொழிவுகளை உள்ளடக்கி அமைச்சரவைக்கு ஓர் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், "நிகழ்ச்சிகளை விருந்தோம்புவது மற்றும் பங்கெடுப்பாளர்களுக்கு அவசியமான விசாக்களை ஒழுங்கு செய்வது ஆகியன மீதான அரச சார்பற்ற நிறுவனங்களின் வேண்டுகோள்களை அனுமதிக்கும்" பணி பாதுகாப்பு, நகர அபிவிருத்தி அமைச்சின் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்திற்கும், கம்பெனிகள் பதிவாளருக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பதிவின் சான்றுப்பத்திரம், நிதிப்படுத்தல் மூலங்களின் விபரங்கள் அத்துடன் கலந்துரையாடப்படவுள்ள விடயங்களின் சுருக்கமான விபரம், நோக்கங்கள் மற்றும் வெளிநாட்டு அழைப்பாளர்களின் விசா விண்ணப்பங்களுக்கு ஆதரவளிப்பதற்கு பங்கெடுப்பாளர்களின் பட்டியல் ஆகியவற்றை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்க வேண்டும்.[14]

### 13. போராட்டமொன்றில் பங்கெடுப்பதிலிருந்து காணாமல்போன தமிழர்களின் குடும்பங்களைத் தடுப்பதற்கு இராணுவம் முயல்வதுடன், தமிழ் மாகாண சபை உறுப்பினர் ஒருவரையும் கைது செய்துள்ளது

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் இறுதி நாட்களின்போது இலங்கையின் இராணுவத்திற்கு குடும்பங்களினால் கையளிக்கப்பட்ட பின்னர் காணாமல்போயுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களிலிருந்தும், உறவினர்களிடமிருந்தும் ஆட்கொணர்வு மனுக்களையிட்டு சட்டபூர்வ விசாரணைகளைக் கோரி ஜூன் 5 அன்று வட மாகாணத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தின் முன்புறமாக இணைந்த போராட்டமொன்றை தமிழர் தேசியக் கூட்டமைப்பும் (த.தே.கூ.), தமிழர் தேசிய மக்கள் முன்னணியும் (த.தே.ம.மு.) நடத்தின. போராட்டத்தில் கலந்து கொள்வதிலிருந்து காணாமல்போனவர்களின் குடும்ப உறுப்பினர்களைத் தடுப்பதற்கு முல்லைத்தீவில் உள்ள இலங்கை இராணுவம் முயன்றுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.[15] நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்கள் மீது த.வி.கூட்டமைப்பைச் சேர்ந்த வட மாகாண சபையின் உறுப்பினர் ஒருவர் கைது

[14] http://www.sundaytimes.lk/140629/columns/five-star-wonder-of-asia-dream-or-nightmare-105246.html (Last accessed on 12th July 2014)
[15] http://www.tamilnet.com/art.html?catid=13&artid=37247 (Last accessed on 12th July 2014)

செய்யப்பட்டதாகவும், ஆனால், போராட்டத்தின் இடம் மாற்றப்பட்ட பின்னர் அவர் விடுவிக்கப்பட்டதாகவும் ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன.

## இ. ஐ.நா. விசாரணைக்கு சாட்சியமளிக்கப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அச்சுறுத்தல்

**14. ஐ.நா. விசாரணைக்கு சாட்சியமளிக்கப்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கான அச்சுறுத்தல்**

“எதிரிகள் வழங்குகின்ற சாட்சியம் மீதான அடிப்படையில், எதிர்காலத்திலான யுத்தக் குற்ற விசாரணையொன்றில் அரசாங்கத்திற்கு எதிராக வழங்கப்படுகின்ற சாட்சியத்திற்கு எதிராகப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்” என அரசாங்கம் அச்சுறுத்தியுள்ளதாக ஊடகங்கள் அறிக்கையிட்டுள்ளன.[16] “இது ஒரு பாரதூரமான சூழ்நிலை என்பதுடன், நாம் அதை நுணுக்கமாகப் பார்க்கின்றோம். களங்கம் விளைவிப்பவர்கள் வழங்குகின்ற சாட்சியம் மீதான அடிப்படையில் நாம் பொருத்தமான நடவடிக்கையை எடுப்போம்” என 'சிலோன் ருடே' என்ற ஆங்கில தினசரி செய்திப்பத்திரிகைக்கு அரசாங்கப் பேச்சாளரும், ஊடக அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. வெளிநாடுகளிலும், இலங்கையிலும் உள்ள புலம்பெயர்ந்த தமிழர்களும் மற்றும் வெளிநாடுகளிலும், இலங்கையிலும் உள்ள ஏனையோரும் ஒன்றுதிரண்டு அரசாங்கத்தின் நற்பெயரைக் களங்கப்படுத்தப் போகிறார்கள் என்பதையிட்டு அரசாங்கம் அறிந்து வைத்துள்ளது என அமைச்சர் கூறியுள்ளதாகவும் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## ஈ. கல்வியியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல்கள், கிளர்ந்தெழுந்த ஆசிரியர்களினதும், பெற்றோர்களினதும் மீது தாக்குதல்

**15. கலாநிதி நிர்மல் ரஞ்ஜித் தேவசிறிக்கு மரண அச்சுறுத்தல்கள்**

ஜூன் 16இலிருந்து தனக்கு விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல்கள் தொடர்பில் மஹரகம பொலிசில் முறைப்பாடொன்றைப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி நிர்மல் ரஞ்ஜித் தேவசிறி தாக்கல் செய்துள்ளதாகக் கூறப்படுகின்றது. கலாநிதி தேவசிறியின் மனைவி கூட அச்சுறுத்தப்பட்டுள்ளதுடன், ஜூன் 17 காலை கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்பொன்று அவரது மகள் ‘அசிட்’ வீச்சுக்கு உட்படுவார் என அச்சுறுத்தியுள்ளது.[17] கடந்த பல ஆண்டுகளாக கலாநிதி தேவசிறி அரசாங்கத்தை தொடர்ச்சியாக விமர்சித்து வந்துள்ளார்.

---

[16] http://dbsjeyaraj.com/dbsj/archives/30626 (Last accessed on 15th July 2014)

[17] http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7119:death-threats-to-dr-nirmal-ranjith-devasiri-&catid=42:smartphones&Itemid=74 (Last accessed on 12th July 2014)




*மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் அச்சுறுத்தி ருகுணு பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலில் ஆளும் கட்சி அரசியல்வாதிகளினால் ஆதரவளிக்கப்பட்ட கும்பல்கள் ஒன்றுகூடியிருந்தன (புகைப்படம்: பீ.பீ.சி. சந்தேஸய)*

## 16. ருகுணு பல்கலைக்கழகத்தின் கல்வியியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல்

தென் மாகாணத்தில் உள்ள ருகுணு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்கு அண்மையில் விடுக்கப்பட்ட மரண அச்சுறுத்தல்களுக்கு அரசாங்கம் பின்னால் இருப்பதாக 2014 ஜூன் 6 அன்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகங்களுடனான சந்திப்பில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் தலைவர் குற்றஞ்சாட்டினார்.[18] பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மீது தாக்குதலொன்றை அவர்கள் கண்டித்த பின்னர், அவர்கள் அச்சுறுத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது. மாணவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்ட காடையர்களுக்கு பொலிசார் பாதுகாப்பளித்ததாக ஊடகங்களுக்கு அச்சுறுத்தப்பட்ட விரிவுரையாளர் கலாநிதி உபுல் அபேரத்ன தெரிவித்தார்.[19]

## 17. ஆர்ப்பாட்டம் செய்த ஆசிரியர்களும், பெற்றோர்களும் தாக்கப்பட்டனர்

கொழும்பு, அசோகா கல்லூரியில் அரசியல் தலையீட்டுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த பெற்றோர்களும், ஆசிரியர்களும் ஜூன் 5 அன்று அறியப்படாத காடையர் குழுவொன்றினால் தாக்கப்பட்டுள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. தாக்குதலின் விளைவாக கொழும்பு பொது வைத்தியசாலையில் தாயொருவர் அனுமதிக்கப்பட்டார். பாடசாலையையும், அதன் கல்வியையும் அதிபர் அழிப்பதாக ஆசிரியர்களும், மாணவர்களும் குற்றஞ்சாட்டினர். மாணவர்களின் எதிர்காலத்தை விட தமது விசுவாசமான ஆதரவாளர்களுக்கே அதிகளவு முன்னுரிமையை அரசாங்கம் வழங்குவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார். தாக்குதலை நடத்தியதாக மேல் மாகாண முதலமைச்சர் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார்.[20]

---

[18] https://www.srilankamirror.com/news/15324-death-threats-to-ruhuna-university-lecturers and http://www.sundaytimes.lk/140608/news/ruhuna-uni-undergrads-to-continue-agitating-for-reopening-of-their-campus-102887.html (Last accessed on 12th July 2014)

[19] https://www.srilankamirror.com/news/15324-death-threats-to-ruhuna-university-lecturers (Last accessed on 12th July 2014)

[20] http://www.lankaviews.com/en/index.php?option=com_content&view=article&id=11677:minister-prasanna-attacks-parents&catid=35:local&Itemid=48 (Last accessed on 12th July 2014)

## உ. மாணவர் செயற்பாடுகளை அடக்குதல்

### 18. ரஜரட்டை பல்கலைக்கழக மாணவர்களின் சத்தியாக்கிரகம் தாக்கப்பட்டது



*மாணவ செயற்பாட்டாளர்களின் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட கொட்டில் (புகைப்படம்: லங்கா ட்ருத்)*

இருபத்தியேழு மாணவர்களின் நியாயமற்ற இடைநிறுத்தலை அகற்றுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கோரி வட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள ரஜரட்டை பல்கலைக்கழக மாணவர்களினால் மேற்கொள்ளப்பட்ட 18 ஜூன் [21] சத்தியாக்கிரக (எதிர்ப்பு) இயக்கம் அன்றும், மீண்டும் 29ஜூன் [22] அன்றும் அறியப்படாத காடையர் குழுவொன்றினால் தாக்கப்பட்டது. சத்தியாக்கிரகத்திற்காக மாணவர்கள் பயன்படுத்திய தற்காலிக கொட்டிலை அதிகாலையில் தாக்குதல் நடத்தியோர் தீயிட்டுக் கொளுத்தினர். "மனித உரிமைகளுக்கான மாணவர்கள்" என்ற அமைப்பின் கூற்றுப்படி முறைப்பாடுகள் செய்யப்பட்ட போதிலும், பொலிசாரினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 19. மூன்று மாணவர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்

ஜூன் 23 அன்று கண்டி பொலிசாரினால் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான மாணவர் சம்மேளனத்தின் (IUSF) முன்னாள் கூட்ட அழைப்பாளர் திரு.சஞ்ஜீவ பண்டாரவும், வேறு இரு மாணவர்களும் கைது செய்யப்பட்டதாக IUSFஇன் தற்போதைய கூட்ட அழைப்பாளர் தெரிவித்தார்.[23] அவர் கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு, 23 ஜூலை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். IUSFஇன் கூற்றுப்படி அவர்களுக்கு எதிராக பொய்யான முறைப்பாடொன்றைப் பல்கலைக்கழகப் பாதுகாப்பு ஆளணியினர் செய்த பின்னர் மாணவர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். மாணவர் ஒருவர் இன் ஃபோம் அமைப்பிற்கு தெரிவித்த போது பல்கலைகழக பாதுகாப்பு அலுவலரின் முறைப்பாட்டின் காரணமாக தாம் கைது செய்யபட்டதாகத் தெரிவித்தனர். பல்கலைக்கழக வளவுக்குள் பிரவேசிக்கும் முன்னைய பிணை நிலைமையொன்றை மீறியமைக்காக திரு.பண்டார பின்னர் குற்றஞ்சுமத்தப்பட்டார். இலங்கையில் சுதந்திரமான கல்வி உரிமைகளுக்கு திரு.பண்டார வலிமையாகப் பரிந்துரைக்கும் ஒருவர் என்பதுடன், கடந்த காலத்தில் பல தடவைகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

---

[21] http://www.lankatruth.com/home/index.php?option=com_content&view=article&id=7125:thugs-attack-students-sathyagraha-&catid=42:smartphones&Itemid=74 (Last accessed on 12th July 2014)
[22] http://www.lankaviews.com/en/index.php?option=com_content&view=article& id=11694:sathyagraha-of-rajarata-students-attacked-by- thugs&catid=35:local&Itemid=48 (Last accessed on 18th June 2014)
[23] http://www.dailymirror.lk/news/48838-bandaras-arrest-part-of-witch-hunt-iusf.html (Last accessed on 12th July 2014)

**20. அரசாங்கப் பொருட்காட்சிக்கு எதிராகப் போராட்டம் நடத்தியமைக்காக ருகுணு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் மீதான தாக்குதல்**

பொலிசார் பார்த்துக்கொண்டிருந்த வேளை பிரதியமைச்சர் சனத் ஜயசூரியவினால் தலைமை வகிக்கப்பட்ட கும்பலொன்றினால் மாணவர்கள் தாக்கப்பட்டமையை இலங்கை வழக்கறிஞர் சங்கத்தின் நிலையியற் குழு கண்டித்துள்ளது.[24] தாக்குதலை ஜனதா விமுக்தி பெரமுனவும் (ஜே.வி.பி.,) கண்டித்துள்ளதுடன், தாக்குதலில் சம்பந்தப்பட்டிருந்த திரு.ஜயசூரியவினதும், அரசாங்க அரசியல்வாதிகளினதும் புகைப்படங்களையும் சமர்ப்பித்திருந்தது.[25] ருகுணு பல்கலைக்கழக வளவில் நடைபெற்ற அரசாங்கத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த 'தெயற்ற கிருள' (தேசத்திற்கு மகுடம்) என்ற வருடாந்தப் பொருட்காட்சியொன்றுக்கு எதிராகமேற்கொள்ளப்பட்ட மாணவர்களின் போராட்டம் காரணமாக இந்த ஜூன் 2இன் தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக சார்த்துரைக்கப்படுகின்றது.[26] மாணவர்களைத் தாக்கிய சார்த்துரைகளைப் பிரதியமைச்சர் நிராகரித்துள்ளார். ஆனால், மாணவர்களுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய குடியிருப்பாளர்களின் குழுவொன்றின் அங்கமாக இருந்ததையிட்டு ஏற்றுக்கொண்டுள்ளார்.[27]

**21. மாணவ செயற்பாட்டாளருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணையும், பல்கலைக்கழகத்திற்குள் பிரவேசிப்பதற்கான தடையும்**

ஜூன் 26 அன்று ஒழுக்காற்று விசாரணையொன்றுக்காக ஒரு முன்னணிவாய்ந்த மாணவி செயற்பாட்டாளரான செல்வி ஷியாமளி லியனஆரச்சி அழைக்கப்பட்டதுடன், விசாரணை நடைமுறைகள் முடியும் வரை பல்கலைக்கழக வளவினுள் பிரவேசிப்பதற்கும் தடைசெய்யப்பட்டார்.[28] மிகவும் மோசமான நிலைமைகளில், சில வேளைகளில் ஒரே அறையில் 25க்கு மேற்பட்ட மாணவர்கள் வாழ்வதற்கு ஏற்கனவே கட்டாயப்படுத்தப்பட்ட மாணவிகளுக்காக புதிய விடுதிக் கட்டிடமொன்றைப் பெறுவதற்காக களனிப் பல்கலைக்கழகத்தில் சகல மாணவிகளின் நடவடிக்கையொன்றின் பின்னர், மாணவிகள் மத்தியில் அமைதியின்மையைத் தூண்டியதாக அவர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.மேற்படி சம்பவத்தின் பின்னர், மாணவர் போராட்டத்தைத் தடைசெய்த நீதிமன்றக் கட்டளையொன்றை மீறி, அப் போராட்டத்தில் பங்கெடுத்தமைக்காக செல்வி ஷியாமளியும், வேறு இரு மாணவிகளும் கைது செய்யப்பட்டனர்.[29] நீதிமன்ற விசாரணையின் போது, அவர் ஒரு பெண்ணாக இருப்பதைக் கருத்திற்கொண்டு எதிர்காலத்தில் அரசியல் நடவடிக்கைகளில் பங்கெடுப்பதற்கு எதிராக செல்வி ஷியாமளியை மகர நீதவான் எச்சரிக்கை செய்தார். மாணவிகளை அச்சுறுத்துவதற்காக விடுதிகளைச் சுற்றி பொல்லு ஒன்றைக் கொண்டு சென்றதாக அவர் பொய்யாகவும், அடிப்படையின்றியும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

**22. மாணவர் செயற்பாட்டாளர்களின் கழுத்துக்களை உடைத்துக்கொள்ள வேண்டமென நீதவான் பரிந்துரைப்பு**

ஜூன் 16 அன்று நீதிமன்றத்தில் ஆஜரான இரு மாணவர்களின் கழுத்துக்கள் பொலிசாரினால் உடைக்கப்பட்டிருக்கும் என (கொழும்பு) கோட்டை நீதவான் திலின கமகே தெரிவித்தார்.[30] பொலிசாரினால் மாணவர் செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டு, தாக்கப்பட்ட வழக்கொன்று தொடர்பில் நீதிமன்றத்தில் இரு மாணவர்கள் ஆஜராகியிருந்தார்கள். இதில் ஒரு மாணவன் பாரதூரமான கண் காயத்தினால் அவதிப்படுகின்றார்.

---

[24] https://www.colombotelegraph.com/index.php/bar-association-condemns-police-inaction-during-ruhuna-university-attack/ (Last accessed on 12th July 2014)

[25] http://www.srilankanews.lk/index.php/news/general-news/3538-master-blaster-blasts-students-jvp (Last accessed on 12th July 2014)

[26] http://www.srilankanews.lk/index.php/news/general-news/3538-master-blaster-blasts-students-jvp (Last accessed on 12th July 2014)

[27] http://www.samachar.com/Jayasuriya-accused-of-attacking-students-ogfmMTagfcd.html (Last accessed on 12th July 2014)

[28] "Monthly update on repression of students in Sri Lanka" – June edition, by "Students for Human Rights"

[29] "Monthly update on repression of students in Sri Lanka" – June edition, by "Students for Human Rights"

[30] "Monthly update on repression of students in Sri Lanka" – June edition, by "Students for Human Rights"

### 23. மாணவர் இடைநிறுத்தப்பட்டார்

பாதுகாப்பு அலுவலர்களின் கடமைக்கு இடையூறு செய்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஜுன் 5 அன்று ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் (வட மத்திய மாகாணத்தில்) பிரயோக விஞ்ஞான பீடத்தின் இறுதியாண்டு மாணவர் ஒருவரான திரு.சி.எம்.அமரரத்ன இடைநிறுத்தப்பட்டார்.[31] இடைநிறுத்தப்பட்ட மாணவரின் கூற்றுப்படி, கிராமவாசிகளைக் கொண்ட குழுவொன்றினால் தாக்கப்பட்ட பின்னர் பாதுகாப்பு வழங்குமாறு மாணவர்களின் குழுவொன்று வேண்டுகோள் விடுத்த போது, பாதுகாப்பை வழங்குவதற்கு அவர்களால் ஏன் முடியவில்லை என பாதுகாப்பு அலுவலர்களை அவர் கேட்டிருந்தார். சம்பவம் நடந்து முடிந்து 4 மாதங்களின் பின்னரே ஒழுக்காற்று விசாரணை பற்றி அவருக்கு அறிவிக்கும் கடிதம் வந்ததாகவும், அவருக்கு எதிராக திட்டவட்டமான குற்றச்சாட்டுக்களை கடிதம் கொண்டிருக்கவில்லை எனவும் அவர் வலியுறுத்தினார். விசாரணையின் போது மட்டுமே, 4 மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவமொன்றுக்கே விசாரணை நடக்கிறது என அவருக்கு அறிவிக்கப்பட்டது. தனது கதையை அவர் விளக்கிய போதிலும், அவர் கல்வியியல் பாதையின் கடைசி அரையாண்டில் ஆறு மாதங்களுக்கு விரிவுரைகளையும், பரீட்சைகளையும் எடுப்பதிலிருந்து இடைநிறுத்தப்பட்டார். பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையொன்றை மேற்கொள்வது தொடர்பில் தோதான நடைமுறையைக் கூட, இடைநிறுத்தல் நடைமுறை பின்பற்றவில்லை என 'மனித உரிமைகளுக்கான மாணவர்கள்' என்ற அமைப்பு வலியுறுத்துகின்றது.

### 24. மாணவர் செயற்பாடுகளை நிந்தித்தல்

மாணவர் செயற்பாட்டாளர்களை முட்டாள்கள், புத்திசுவாதீனமற்றவர்கள் மற்றும் நரிகள் என உயர் கல்வி அமைச்சர் வசைபாடியுள்ளதுடன்[32], அவர்களால் எழுப்பப்பட்ட ஏதாவதையிட்டு கலந்துரையாடவோ, பதிலிறுக்கவோ முடியாது என்றும், நரிகளுக்கு அன்றி, மாணவர்களுக்கு மட்டுமே பதிலிறுப்பேன் என்றும் தெரிவித்தார். உயர் கல்வி அமைச்சரின் இந்த உரையை அவர்கள் வன்மையாக ஆட்சேபிப்பதாக ஊடகங்களுக்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனத்தின் (FUTA) தலைவர் கலாநிதி சந்திரகுப்த தேனுவர தெரிவித்தார்.[33]

## ஊ. சமய சுதந்திரத்தை மேம்படுத்தும் HRD மீது அச்சுறுத்தல்களும், தாக்குதல்களும்

### 25. பொலிஸ் பாதுகாப்பின் மீளப்பெறலும், வண.வட்டரேக்க விஜித தேரர் மீதான சார்த்துரைக்கப்பட்ட தாக்குதலும்

சமய சுதந்திரத்தை, விசேடமாக இலங்கையில் உள்ள சிறுபான்மை சமய குழுக்களை வண.விஜித தேரர் தீவிரமாக ஆதரிப்பதுவதுடன், 2013 முதல் பொது பல சேனாவின் (பௌத்த அதிகாரப் படை) கருத்துக்களையும், செயற்பாடுகளையும் கடுமையாக விமர்சிக்கின்றார். அவர் தாக்கப்பட்டு, காயமடைந்துள்ளார், மரண அச்சுறுத்தல்களைப் பெற்றுள்ளார், மதிப்பு குறைக்கப்பட்டுள்ளார், கூட்டங்களில் பங்கெடுப்பதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளார், அவர் ஒழுங்கு செய்திருந்த பத்திரிகையாளர் மகாநாடொன்று குழப்பப்பட்டு பொலிசாரால் இரத்து செய்யப்பட்டது.. இவை யாவற்றுக்கும் பொதுபல சேனாவை நோக்கி சான்று சுட்டிக்காட்டியுள்ளது.[34] ஜனாதிபதி உட்பட அரசியல் தலைவர்களுக்கும், அத்துடன் பொலிஸ் மா அதிபர் உட்பட பொலிசாருக்கும் அடிக்கடி மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளினதும், கோரிக்கைகளின்

---

[31] “Monthly update on repression of students in Sri Lanka” – June edition, by “Students for Human Rights”

[32] Original speech in Sinhalese is available at http://www.col4neg.net/newspage/sirasa-news-1st/sirasa-news-1st-7pm-05-06-2014.html (minutes 17.56 to 18.13 of the news broadcast) while the English translation (text and video) which is slight edited, is at http://newsfirst.lk/english/2014/06/allied-health-science-students-issue-will-provide-answers-foxes-s-b-dissanayake/38708 (Last accessed on 12th July 2014)

[33] https://www.srilankamirror.com/news/15324-death-threats-to-ruhuna-university-lecturers (Last accessed on 12th July 2014)

[34] See http://groundviews.org/2014/06/20/did-the-bbs-attack-vijitha-thero-again/ and http://groundviews.org/2013/10/09/buddhist-monk-attacked-by-bodu-bala-sena-and-police-inaction/ (Last accessed on 13th July 2014)

பின்னர் அவருக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. ஆனால், அறிவித்தலின்றியும், விளக்கமின்றியும் ஜூன் 7 அன்று பொலிஸ் பாதுகாப்பு மீளப்பெறப்பட்டது. ஜூன் 9 அன்று, பத்திரிகையாளர் மகாநாட்டைக் குழப்பியமை தொடர்பிலான வழக்கு கோட்டை (கொழும்பு) நீதவான் மன்றத்தில் எடுக்கப்பட்ட போது, "இந்த நாய் எங்கே? அந்த நாளன்று நான் அவனைக் கொலை செய்துவிட்டு, உள்ளே (சிறைச்சாலை) சென்றிருக்கலாம்" என பொதுபல சேனவின் தலைவர் வண.ஞானசார தேரர் கூறியுள்ளார். விஜித தேரருக்காக ஆஜராகிய வழக்கறிஞரையும் நாயென்று அவர் (பொது பல சேனவின் தலைவர்) அழைத்துள்ளார்.[35]



*விஜித தேரர்: கடத்தப்பட்டு தாக்கப்பட்டாரா? (புகைப்படம்: நெத் எப்.எம்)*

ஜூன் 19 அன்று காலைவேளை கடும் காயங்களுடன், வீதியோரத்தில், நிர்வாண நிலையில், அவரது சொந்த காவியுடையினால் கைகளும், கால்களும் கட்டப்பட்ட நிலையில் விஜித தேரர் கண்டுபிடிக்கப்பட்டார். அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், நண்பர்களையும், வழக்கறிஞர்களையும் கூட சுதந்திரமாகச் சந்திப்பதற்கு அனுமதிக்கப்படவில்லை என்பதுடன், அவர் படுக்கைக்கு பக்கத்தில் பொலிஸ் அலுவலர்கள் பிரசன்னமாகியிருந்தனர். பிந்திய சம்பவம் பற்றி பொய்யான முறைப்பாடொன்றைச் செய்துள்ளதாகவும், காயங்கள் சுயமாக- இழைக்கப்பட்டவை எனவும் விஜித தேரர் ஒத்துக்கொண்டுள்ளதாக பொலிசார் பின்னர் வலியுறுத்தியிருந்தனர்.[36] இச் செயலுக்கு வேறு சான்றுகளும், அத்தாட்சிகளும் தம்மிடம் இருப்பதாக பொலிசார் வலியுறுத்தியதுடன், வைத்தியசாலையிலிருந்து அவர் வெளியேறிய உடனேயே அவரைக் கைது செய்தனர். சார்த்துரைக்கப்பட்ட குற்றமானது பிணை வழங்கப்படக்கூடிய குற்றமாக இருந்த போதிலும், அவருக்கு பாணந்துறை நீதவான் இரு தடவைகள் பிணை வழங்க மறுத்தார். இறுதியாக ஜூலை 10 அன்று அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஊடகங்களுடன் அது முதல் பேசிய விஜித தேரர் தான் உண்மையிலேயே கடத்தப்பட்டு, தாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.[37]

---

[35] http://www.dailymirror.lk/news/48186-counsel-says-vengnanasara-thera-insulted-him.html and http://www.srilankanews.lk/index.php/news/general-news/3585-bbs-insulted-me-lawyer-complaints- (Last accessed on 12th July 2014)

[36] http://newsfirst.lk/english/2014/06/venerable-watareka-vijitha-thero-abducted-police-media-spokesperson/41185 (Last accessed on 13th July 2014)

[37] http://groundviews.org/2014/06/26/ven-wataraka-theros-last-statement-before-his-arrest-with-english-subtitles/ (Last accessed on 13th July 2014)

## எ. இனவாத வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிய எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மீது தாக்குதல்

### 26. எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு.பாலித தேவரபெரும காயமடைந்ததுடன், வாகனமும் அழிக்கப்பட்டது

தர்கா நகரத்தில் (அளுத்கமவுக்கு அருகில்) ஜூன் 16 அன்று வன்முறைக்கும்பலொன்றினால் தாக்கப்பட்டதாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான (ஐக்கிய தேசியக் கட்சி) திரு.பாலித்த தேவரபெரும குறிப்பிட்டுள்ளார்.[38] இது ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளை இடம்பெற்றதாகவும், பொலிஸ் மற்றும் விசேட செயலணி (பொலிசின் ‘ கொமாண்டோ ’ அலகு) பார்த்துக் கொண்டிருந்த வேளை தனது வாகனம் அழிக்கப்பட்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அறிக்கையிட்டுள்ளார். தர்கா நகரத்தில் உள்ள உதவியற்ற மக்களைப் பார்வையிடுவதற்காக அங்கு சென்றதாகவும், அவ் வேளையில் வாள்களையும், பொல்லுகளையும் தம் வசம் வைத்திருந்த குழுவொன்று பெண்களையும், சிறுவர்களையும் கொண்ட குழுவொன்றைக் கொல்வதற்கு முயற்சித்ததை தான் கண்டதாகவும் ஊடகங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். அவர்களைக் காப்பாற்றும் பொருட்டு, அவர் வாகனத்தில் இருந்து கீழிறங்கி அவர்களை அதனுள்ளே அமரச் செய்தார்.அவர் கடும் காயங்களுக்கு உள்ளாகி இருந்ததுடன் அவரது வாகனமும் சேதப் படுத்தப் பட்டது.

---

[38] http://www.lankasrinews.com/view.php?22qKH303dOK4e2HqGcb2a1Jdd3175bc3qD8e43Vf20235Co3, http://www.dailymirror.lk/opinion/172-opinion/49654-unfortunate-riots-were-not-by-chance.html and http://lankaenews.com/English/news.php?id=14285 (Last accessed on 15th July 2014)